பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

சுடர்! 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 25 செவ்வாய்க்கிழமை (10-11-1992) UTHAYAN — A Lively National Tamil Daily இதழ் 34 8

உகணையில் சம்பவம்

விமானப்படை ஹெலி விழுந்து நொறுங்கியது!

புலிகளின் தாக்குதல் காரணம்?

கொழும்பு, நவம்பர் 10

கிழக்கு மாகாணத்தில் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த விமானப்படையின் "பெல்" ஹெலிக்கொப்டர் ஒன்று நேற்று விழுந்து நொருங்கியது. இந்த ஹெலிக்கொப்டரை விடுதலைப் புலிகள் சுட்டு வீழ்த்தியிருக்கலாம் எனச் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

ஸ்ரீலங்காப் படைகள் விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதல்களை நடத்திவரும் பகுதிக்கு அருகில் - உகணை தான் —

விமானப் படை முகாமுக்கு சிறிது தூரம் - இந்த ஹெலி விழுந்து நொருங்கியிருப்பதாகவும்—

புலிகளே இந்த ஹெலியைச் சுட்டு வீழ்த்தியிருக்கக் கூடும் என கொழும்பில் செய்தி ஏஜென்சி ஒன்று கருத்து வெளியிட்டது.

ஆனால் ஹெலி எப்படி விழுந்து நொறுங்கியது என்பதற்கான காரணத்தை இப்போதே கூறமுடியாது என்று ஸ்ரீலங்காப் படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

சம்பவம் நடந்த பகுதிக்கு விசாரணை நடத்துவதற்காக படை அதிகாரிகள் சென்றிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

அதிகாரி பலி விமானி காயம்

கொழும்பு, நவ. 10

கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டம் உகணைப் பகுதியில் ஸ்ரீலங்கா விமானப் படை ஹெலிக்கொப்டர் விழுந்து நொறுங்கிய சம்பவத்தில் நேற்று விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் நேரடியாக ஈடுபட்டு வந்த 'ரெஜிமெண்ட்' அதிகாரி ஒருவர் உயிரிழந்தார்; விமானி ஒருவரும் விமானப் படைச் சிப்பாய் ஒருவரும் படுகாயமுற்றனர் என்று ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

விழுந்து நொறுங்கியதில் ஹெலிக்கொப்டர் முற்றாக நாசமாகியது என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3-6)

மட்டக்களப்பில் தொடர்ந்து இராணுவ நடவடிக்கை

படைக்கு உதவியாக ரெலோ

கொழும்பு, நவ. 10

மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினர் கடந்த ஞாயிறு அதிகாலை ஆரம்பித்த இராணுவ நடவடிக்கைக்கு 'ஜயஹர' என்று பெயரிடப்பட்டிருக்கிறது;

விமானப்படை ஹெலிக்கொப்டர்களின் உதவியுடன் படையினர் தொடர்ந்தும்

தேடுதல் நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது;

படையினர் மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கைக்கு உதவியாக 'ரெலோ' அமைப்பும் மற்றுமொரு தமிழ் அமைப்பும் பெரிதும் உதவி வருகின்றன என்று வெளிநாட்டு வானொலி ஒன்று அறிவித்தது. (உ-எ)

தீர்வுக்கான வழி குறித்து குவாக்கர் குழுவினர் புலிகளுடன் பேச்சு!

யாழ்ப்பாணம் வந்துள்ள "குவாக்கர்" சமாதான அமைப்பின் பிரதிநிதிகள் நேற்று விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சுக்கள் நடத்தினர்.

இளைப்பாரிகளுக்கான அரசியல் தீர்வு ஒன்றை எட்டும் விடயம் தொடர்பாகவே இப் பேச்சுக்கள் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் வருவதற்கு முன்னர் இத்தூதுக்குழுவினர் கொழும்பில் பல அரசியல் கட்சித் தலைவர்கள், அதிகாரிகள் ஆகியோருடன் பேச்சு நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

தூதுக்குழுவினர் இன்று மீண்டும் கொழும்பு திரும்புவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (உ-8)

'குமண' புறப்பட்டது; 'குமாரி' இன்று வரும்

யாழ்ப்பாணம், நவ. 10

கொழும்பில் இருந்து கொண்டு வந்த பொருள்களை இறக்கி முடித்துக் கொண்டு 'குமண' கப்பல் நேற்று மாலை பருத்தித்துறையில் இருந்து புறப்பட்டது.

அதைத் தொடர்ந்து 3 ஆயிரத்து 200 மெற்றிக் தொன் மாலை ஏற்றிய நிலையில் திருகோணமலையில் தரித்து நின்ற 'குமாரி' கப்பல் அங்கிருந்து நேற்று மாலை புறப்பட்டதாகவும்—

இன்று காலை அக்கப்பல்

(6ஆம் பக்கம் பார்க்க)

யாழ். ஏரியில் இளம்மீனவர் கடற்படையினரால் கைது!

குருநகர், நவ. 10

யாழ். குடாக்கடல் ஏரியில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது கடற்படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர். அத்தோடு இளம் மீனவர் ஒருவரைக் கைது செய்து கொண்டு சென்றனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு இடம் பெற்றது.

படையினரின் தாக்குதலை அடுத்து கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் பெறுமதிமிக்க உபகரணங்களையும் வள்ளங்களையும் கடலில் விட்டுவிட்டு நீந்திக் கரை சேர்ந்தனர்.

குருநகர் புதிய கடற்கரை வீதியைச் சேர்ந்த அன்ரன் நிக்சன் (அப்புக்குட்டி - வயது 15) என்ற இளைஞரே படையினரால் கைது செய்யப் பட்டார்.

இவருடன் ஒரே வள்ளத்தில் சென்ற மற்றைய இரு மீனவர்கள் கடற்படையினரால் கண்டதும் கடலில் பாய்ந்து நீந்திக் கரைசேர்ந்தனர். (உ-51)

வடமராட்சியில் டோலியோ தீவிரமாகப் பரவி வருகிறது!

சிறுமி ஒருத்தி மரணம்

வடமராட்சி, நவ. 10

வடமராட்சிப் பகுதியில் இளம்பிள்ளைவாத (போலியோ) நோய் மிக வேகமாகப் பரவி வருவதாக அஞ்சப்படுகிறது.

இதுவரை நான்கு சிறுவர்கள் இளம்பிள்ளைவாத நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதாக இனங்காணப்பட்டுள்ளது.

இவர்களில் சிறுமி ஒருத்தி மரணமானார்;

புலோலி கிழக்குப் பகுதியைச் சேர்ந்த ஆறு வயதான கபாஷினி என்ற சிறுமியே இளம்பிள்ளைவாத நோய்க்குப் பலியானவர் ஆவர்.

நாகர்கோவில் ஆதி முகாமைச் சேர்ந்த க. ஜெய

(6 ஆம் பக்கம் பார்க்க)

வடக்கு-கிழக்கைப் பிரிக்க ரெலோ அமைப்பு இணக்கம்

புதுடில்லி, நவ. 10

இலங்கைப் பிரச்சினைக்கு வடக்கு-கிழக்கு மாகாணங்களைப் பிரிப்பதன் அடிப்படையில் அமைந்த தீர்வு ஒன்றிற்கான யோசனையை தமிழீழ விடுதலை ஸ்தாபனம் (ரெலோ) முதன்முறையாக வெளியிட்டிருக்கிறது.

இந்த யோசனையை பரிசீலனை செய்ய முன்வருமாறு கொழும்பில் உள்ள ஏழு தமிழ்க் கட்சிகளையும் ரெலோ அழைத்துள்ளதாகவும் இந்திய வானொலி தெரிவித்தது.

தற்போது வடக்கு-கிழக்கு மாகாணம் தற்காலிகமாக இணைக்கப்பட்டிருப்பதைரத்துச் செய்து இரு மாகாணங்களும் தனித்தனி மாகாண சபைகளாக இயங்கும் திட்டத்தை ஏற்கவும் ரெலோ விரும்பம் தெரிவித்துள்ளது.

தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட ஓர் ஆளுநரின் கீழ் இரண்டு மாகாண சபைகளும் தனித்தனியாக இயங்க வேண்டும் என்பதே ரெலோவின் யோசனையாகும்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் தற்காலிகமாக இணைக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணங்களைப் பிரித்து விடுவதற்கான யோசனையை ஏற்க தமது ஸ்தா

(6 ஆம் பக்கம் பார்க்க)

வீட்டிற்கு வீடு மரம் நாட்டினால்
நாட்டுக்கு மழைநீர் நாளுமுண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரண அறிவித்தல்கள்

முருகேசு விசாலாட்சி

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ். கோவில் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட வருமாகிய முருகேசு விசாலாட்சி என்பவர் 09-11-92 அன்று சிவபதமடைந்து விட்டார்; அன்னார் காலஞ்சென்ற பண்டாரி முருகேசு அவர்களின் அன்பு மனைவியும், பரமலிங்கம், பேரின்பம் [இராசா], கமலாதேவி, இராமலிங்கம் [காணிக் கிளை, கச்சேரி - வவுனியா], காலஞ்சென்ற பரமேஸ்வரி, சறோஜினிதேவி, தையல்நாயகி ஆகியோரின் அன்புத் தாயாரும், பரமேஸ்வரி, தருமலிங்கம், சிறில், சரஸ்வதி, மயில்வாகனம் ஆகியோரின் அன்பு மாமியாரும், சாந்தினி (சுவிஸ்), ரவீந்திரன் (சுவிஸ்), ஜெயந்தினி, சுகந்தினி, ஸ்ரீ நாகபூசனி, மீனலோஜனி ரஞ்சிதபூசனி, கோமதி, குணேஸ் [ஓமான்], காலஞ்சென்ற ரமேஸ், சுரேஸ், ஜீவானந்தம், இராஜேந்திரன் [தேவன்], ராஜசேகரன், குணசேகரன், சந்திரசேகரன், பாலசேகரன், பவி [நுவரெலியா] ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், தர்சினி பிரகாஸ், சுஜீவன், ரவீந்திரப்பிரசாத், மதிவதனி கௌதமி, கியாமளன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 10-11 1992 காலை 10-00 மணிக்கு 211/7, கோவில் வீதியில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்;
மு. பேரின்பம் (இராசா).

211/7, கோவில் வீதி,
யாழ்ப்பாணம். [23206]

சின்னத்தம்பி வல்லிபுரம்

கரம்பன் தெற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி வல்லிபுரம் அவர்கள் 09 - 11 - 1992 திங்கட்கிழமை கந்தர்மடத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோகம்மாவின் அன்புக் கணவரும், திருமதி சின்னையா - நாகம்மாவின் அன்புச் சகோதரரும், ஜெயபாலசிங்கம் [லண்டன்], ஜெயலட்சுமி, பாக்கியலட்சுமி, ஜெகதாம்பிகை [கனடா], விஜயலட்சுமி, வரதலட்சுமி [கனடா], தனபாலசிங்கம் [கனடா], தனலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலாதேவி [லண்டன்], சிவசுப்பிரமணியம் [உரிமையாளர், ஜெயலக்சுமி கம்பனி], அருணாசலம் [ஜேர்மனி], வைத்திலிங்கம் [கனடா], காலஞ்சென்ற மகேந்திரன், குலசிங்கம் [ஜேர்மனி], குகநாயகி [கனடா], சிவானந்தசோதி [உரிமையாளர், சோதி ஜூவல்ரி] ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவதாஸ் [மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்], ஜெயந்தி, சண்முகதாஸ் [மருத்துவபீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்], வசந்தி, சுகந்தி, கணேஷ், லக்சி, கிரிதரன், சுதாகரன், பாஸ்கரன், கஷன், புனேஷ், சுகா, பிரியா, திரு, பூமா, ஜெயசீலன் ஆகியோரின் பேரனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இல. 59, குமாரசுவாமி வீதி, கந்தர்மடம் இல்லத்தில் இன்று (10 - 11 - 1992) செவ்வாய்க் கிழமை 10 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
[23209] சி. சிவதாஸ் (பேரன்)

கணபதிப்பிள்ளை நடராசா

[இளைப்பாறிய எழுதுவினைஞர் - கட்டடத் திணைக்களம்]

கல்வயல் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட கணபதிப்பிள்ளை நடராசா 09 - 11 - 1992 அன்று சிவபதமடைந்துவிட்டார். இவர் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், கிருபாகரன், கருணாகரன், பகீரதியின் அன்புத் தந்தையும், பண்டிதர் வேலுப்பிள்ளை [இளைப்பாறிய ஆசிரியர்], இளைப்பாறிய ஆசிரியர்கள் அருணாசலம், சங்கரப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும், பரமேஸ்வரி, புவனேஸ்வரி, இரத்தினேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், பரராசசிங்கம் [நெல்லியடி], மகாலிங்கம் [கொழும்பு] ஆகியோரின் சகலனும், சிறீபாஸ்கரன், பார்த்தீபன், பாலமோகன், முகுந்தன் ஆகியோரின் சிறியதந்தையும் ஆவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் நேற்று (09 - 11 - 1992) மாலை நடைபெற்றன. இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ப. பரராசசிங்கம்.

கல்வயல்,
சாவச்சேரி. [5560]

ராஜீவ்காந்தி பற்றிய புத்தகத்தால் இந்தியாவில் பெரும் சர்ச்சை!

புதுடில்லி, நவ 10

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி குறித்து இந்தியாவில் வெளியிடப்பட்ட புதிய புத்தகம் பெரிய சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறது;

பத்திரிகையாளர் ஒருவர் பல அரசியல்வாதிகள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகள் ஆகியோரைப் பேட்டி கண்டு ராஜீவ்காந்தி குறித்து அவர்கள் தெரிவித்த கருத்துக்களை இப்புத்தகத்தில் வெளியிட்டிருக்கிறார்;

முன்னாள் ஜனாதிபதி ஜெயில்சிங் ராஜீவ் காந்தி பற்றி அந்த நூலில் தெரிவித்த கருத்துக்களே புதுடில்லியில் பலத்த சர்ச்சையைக் கிளப்பியுள்ளன.

1987 இல் பிரதமராக இருந்த ராஜீவ்காந்தி தம்மை அவமரியாதையாக நடத்தினார் என்றும் —

அப்போது அவரது தலைமையிலான அரசாங்கத்தை கலைக்க தாம் எண்ணியிருந்ததாகவும் —

தம்மை நடத்திய விதம் குறித்து ராஜீவ் காந்தி பின்னர் தம்மிடம் மன்னிப்புக் கோரியதால் தாம் ராஜீவ் அரசை கலைக்கவில்லை என்றும் திரு. ஜெயில்சிங் கூறியதாக அப் புத்தகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது;

அந்தச் சமயத்தில் மாற்று அரசாங்கம் ஒன்றை அமைக்கக் கூடிய பலமான நிலையில் எவரும் இல்லாததும் ராஜீவைத் [தாம் பதவி] நீக்கஞ் செய்யாததற்கு இன்னொரு காரணம் என்று ஜெயில்சிங் தெரிவித்ததாக அந் நூலில் மேலும் கூறப்பட்டுள்ளது.

(5 ஆம் பக்கம் பார்க்க)

வடக்கிற்கு தளபாடங்கள் அனுப்பராணுவம் நிபந்தனை

யாழ்ப்பாணம், நவ. 10

யாழ் மாவட்டத்துக்கு எனத் தயாரிக்கப்பட்ட தளபாடங்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்ப கூட்டுப்படை தலைமையகம் நிபந்தனை விதித்துள்ளது.

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இவ்வாண்டு 35 லட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்களை வழங்க வடக்கு - கிழக்கு மாகாண சபை ஏற்பாடு செய்துள்ளதாகவும் —

தளபாடங்கள் மட்டக்களப்பில் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது;

இந்தத் தளபாடங்களை யாழ் மாவட்டத்துக்கு அனுப்ப மாகாண சபை கூட்டுப்படை தலைமையகத்துக்கு அனுமதி கோரி விண்ணப்பித்த வேளை —

மொத்த தளபாடங்களில் 50 வீதமானவற்றை இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள பாடசாலைகளுக்கு வழங்கினால் மட்டுமே தளபாடங்களை எடுத்துச் செல்ல அனுமதி வழங்க முடியும் என்று கூட்டுப்படைத் தலைமையகம் நிபந்தனை விதித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

[உ-3]

கொழும்பு மாநகரசபையில் 4வருடங்களாக டீசல் திருட்டு

கொழும்பு, நவ. 10

கொழும்பு மாநகரசபையில் நான்கு வருடங்களாக நடைபெற்று வரும் டீசல் திருட்டு நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டது.

மாநகரசபையில் கிளை அலுவலகக் களஞ்சியம் ஒன்றிலிருந்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான 21 "பரல்" டீசலைத் திருடியது கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டது.

வாழைத்தோட்ட பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியும், கொழும்பு மேயரும் நேற்று அதிகாலை 3 மணிக்கு அங்கு சென்று டீசல் திருடப்படுவதைக் கையும் மெய்யுமாகப் பிடித்தனர்.

குப்பை ஏற்றும் லொறிகளிலேயே திருடப்படும் டீசல் "பரல்"கள் கடத்தப்பட்டமையும் விசாரணை மூலம் தெரியவந்தது.

இது தொடர்பாக 50 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த 4 வருடங்களாக பல லட்சம் ரூபா பெறுமதியான டீசல் இவ்வாறு குப்பை லொறிகள் மூலம் எடுத்துச் செல்லப்பட்டதாம்.

இலவச சீருடைத்துணிகள் மாத இறுதியில் வந்து சேரும்

யாழ்ப்பாணம், நவ. 10

யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகள் "குமண" கப்பல் மூலம் இம்மாத இறுதியில் இங்கு வந்து சேரும் என கல்வி அலுவலக வட்டாரங்கள் நம்பிக்கை வெளியிட்டன.

யாழ். மாவட்டத்தில் உள்ள ஆறு கோட்டங்களிலும் உள்ள மாணவர்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும்—

சீருடைத்துணிகள் கொழும்பில் இருந்து திருகோணமலைக்கு எடுத்து வரப்பட்டு கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவரப்படும் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

ஒவ்வொரு மாணவருக்கும் உரிய அளவில் துணிகள் வெட்டப்பட்டு தனித்தனி பைகளில் போட்டு அனுப்பப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

உ
சிவமயம்

திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் ஆங்கீரச வருஷம் ஐப்பசித் திங்கள் 26 ஆம் நாள் (11-11-1992) புதன்கிழமை பிற்பகல் 2 22 மணி முதல் 4-15 மணிவரையுள்ள மீன லக்கின சுபவேளையில்

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
தியாகராஜா
அவர்களுக்கும்

எமது புத்திரி
திருநிறை செல்வி
சந்திரகலா
அவர்களுக்கும்

நல்லை ஆதீனத்தில் திருமணம் செய்யத் திருவருள் கூடியமையால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்;

தலைபாகை அணிதல் 11-45 — 12 45 மணிவரை

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்;

திரு. திருமதி கு. க. கதிரவேலு,
[புளியங்கூடல்]
முன்லிம் கல்லூரி வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்;

திருமதி அ. செல்வராஜா பிள்ளைகள்,
[வேலணை மேற்கு] வேலணை - 7
37/21. 1ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

★ இருவீட்டார் அழைப்பு ★

சுபம்

[23214]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் இல. நூலகம்
காங்கேசன்துறை வீதி

பூசலைத் தீர்க்க காலக்கெடு

கொழும்பு, நவ. 10

சிறிமா, சந்திரிகா, அனுரா ஆகியோர் தங்களுக்குள் நிலவும் குடும்பப் பூசலை ஒரு மாதத்தினுள் முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் அல்லது சுதந்திரக் கட்சியில் இருந்து வெளியேறி விட வேண்டும்.

இப்படி சுதந்திரக்கட்சியின் தற்போதைய தலைமைத்துவம் விடுத்துள்ளது. (இ-எ)

Computer Programming
in
BASIC Language
4 MONTHS
திங்கள், வெள்ளி வகுப்புகள்
ஆரம்பம்: 16 - 11 - 1992
8-30 மணி
Lectures By: S. P. Sivapathasundaram
M. I. D. P. M (Lond.)

★ கட்டணம் தவணை முறையில்
★ இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
★ கூடிய செய்முறைப் பயிற்சி
★ பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்

C. I. M. A. Stage-1 I. A. B. (All Stages)
SHORT-HAND & TYPING
விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

SCHOOL OF BUSINESS ADMINISTRATION
(Pioneers in Computer Education)
16, 3rd, CROSS STREET, JAFFNA.
(C-3684)

அரசாங்க அறிவித்தல்

சுகாதார தினைக்களம், யாழ்ப்பாணம்.

மரத்தளபாடம் வழங்கல்

கீழே விவரிக்கப்பட்ட மரத்தளபாடங்கள் வழங்குவதற்கான முத்திரையிடப்பட்ட (Sealed) கேள்விப் பத்திரங்கள் என்னால் 16 - 11 - 1992 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன் ஏற்றுக் கொள்ளப்படும்.

1.	மேசை இரண்டு லாச்சி 4½' x 2½' x 2½' (முதிரை)	— 50
2.	பணப்பெட்டி வைப்பதற்கான ஸ்ராண்ட் (முதிரை) 2' 5'' x 1' 9'' x 1' 9'' (Stand for Iron Save)	— 01
3.	எண்ணெய் பரல் வைப்பதற்கான - ஸ்ராண்ட் (முதிரை) (Stand for Fuel Barrel)	— 01
4.	தட்டெழுத்தாளர் மேசை - 4' x 2' x 2½' (முதிரை)	— 03
5.	தட்டெழுத்தாளர் கதிரை (முதிரை)	— 03
6.	கரும்பலகை (முதிரை) 6' x 4'	— 10

மேற்படி கேள்விப் பத்திரங்கள் உரிமையாளரால் தயாரிக்கப்பட்டு உறையில் இடப்பட்டு அரசுக்கு முத்திரை இடப்பட வேண்டும். அத்துடன் அவ்வுறையின் இடதுபக்க மேல் மூலையில் "யாழ். சுகாதார தினைக்களத்திற்கான மரத்தளபாடங்கள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள்" என்று குறிப்பிடல் வேண்டும். இப்பத்திரங்கள் என்னால் 16 - 11 - 1992 ஆம் திகதி பிற்பகல் 2 00 மணிக்கு திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிப்பவர்கள் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் போது சமுகமளிக்கலாம். அல்லது எழுத்து மூலமான அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரை அனுப்பலாம். ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்விதாரர்கள் 21 - 12 - 1992 ஆம் திகதிக்கு முன் தளபாடங்களை வழங்க வேண்டும். இத்தளபாடங்களின் மாதிரிகளை பார்வையிட விரும்புவோர் 13 - 11 - 1992 ஆம் திகதி காரியாலய நேரத்தில் பார்வையிடலாம்.

வைத்திய கலாநிதி பொ. இரத்தினசபாபதி.
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்.

க. சே. பி. ம: பணிமனை,
57, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.
06 - 11 - 1992 (இ-3677)

சிற்றூழியருக்கு பதவி உயர்வு

யாழ்ப்பாணம், நவ. 10

யாழ்ப்பாணம் மாநகரசபை சிற்றூழியர்களைக் கடமை மாற்றியவர்களில் 5 பேர், மேற்பார்வை உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். (இ-126)

ஆங்கில மொழி போதனை கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ. 10

'யாழ்ப்பாணப் பாடசாலைகளில் ஆங்கில மொழிப் போதனை' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று நாளை புதன்கிழமை மாலை 3-00மணிக்கு யாழ். பல்கலைக்கழக புதியவர் மண்டபத்தில் நடைபெற உள்ளது.

யாழ். பல்கலைக்கழக ஆங்கில மன்ற ஆதரவில் நடைபெறும் இக்கருத்தரங்கில் திருவாளர்கள் கே.கே. சோமசுந்தரம், சோ. பத்மநாதன், து. நியாரோசா. எஸ். தெய்வநாயகம் ஆகிய கல்வியியலாளர்கள் உரை நிகழ்த்த உள்ளனர். (இ)

ரூபா 20 புதிய நோட்டு

கொழும்பு, நவ. 10

புதிய 20 ரூபா நாணயத்தாள் இன்று முதல் பாவனைக்கு விடப்படுகிறது.

தனித்துவமான வீரேட வடிவமைப்பானதைக் கொண்டதாக புதிய தாள் இருக்கும் என்று மத்திய வங்கி கூறியிருக்கிறது.

ஏற்கனவே வெளியான 20 ரூபா நாணயத்தாள் தொடர்ந்தும் புழக்கத்தில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடெங்கிலுமுள்ள மரவள்ளிப் பிரதிநிதிகளுக்கும் அவசியமான மத்திய வங்கி பாவனைக்கு விடப்பட்ட நாணயத்தாள்களில் இது இறுதியான தாளும். (இ-எ)

இலங்கை மாலுமிகள் மீது துன்புறுத்தல்

கொழும்பு, நவ 10

இலங்கை உட்பட ஆசிய நாடுகளைச் சேர்ந்த மாலுமிகள் கப்பல்களில் இம்சைப்படுத்தப்படுகின்றார்கள்.

இப்டி ஆன்டிரேவிய எம்.பி. பீற்றர் மொறிஸ் குற்றஞ் சாட்டியுள்ளார்.

பாவிலன் தொடர்பாக அவர்கள் கேலப்படுத்தப்படுகின்றார்கள். மற்றும் பட்டினி போடப்படுகின்றார்கள் என்றும் அவர் கூறினார். (இ-எ)

விலங்கியல்
R.N. ஈஸ்வரதாசன்
(B.Sc. Cey.)
93A/L,-94A/L
புதிய பிரிவுகள்
நேர அட்டவணை நிறுவனத்தில்
சயன்ஸ் சென்ரர்
எழிலகம், முன் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(இ-3685)

மூப்படைந்த தினைக்கள ஊழியருக்கு நிவாரணம்

கொழும்பு, நவ. 10

அரசாங்கத் தினைக்களங்கள் சில மூடப்பட்டதன் காரணமாக நிதிசார் பணி ஏதுமின்றிச் சேவையில் இருந்து நிறுத்தப்பட்ட அரசு ஊழியருக்கு நிவாரணம் வழங்குவது குறித்து அரசு ஆராய்ந்து வருகிறது.

தினைக்களங்கள் மூடப்பட்ட வேளையில் ஓவுதியம் பெறுவதற்குரிய பத்து வருட கால சேவையைப் பூர்த்தி செய்யாதிருந்த ஊழியருக்கு ஓய்வூதியம் பெறும் சலுகை வழங்கப்படவிருக்கிறது.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபை அமைச்சு ஏனைய அமைச்சுகள், தினைக்களங்கள் ஆகியவற்றுக்கு இது தொடர்பான சுற்றறிருபம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

பத்து வருட கால சேவை (5 ஆம் பக்கம் பார்க்க)

சமயலறை மேற்பார்வையாளர்
சக உப விடுதிக்காப்பாளர்

சைவ வித்தியா விருத்திச் சங்க கிறுவர் நிலைய வாழ்வு இல்லத்திற்கு மேற்படி பதவிக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது.

க. பொ. த (சாதாரண) பரீட்சையில் தேறி யிடைத்தவர்கள் விண்ணப்பிக்கலாம். மேற்குறித்த பதவியில் முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சிறுவர் நிலையாழ்வு இல்லத்தில் தங்கியிருந்து கடமை புரியக்கூடியவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பம் சனிக்கிழமை 21 - 11 - 1992 இற்கு முன்னராக கிடைக்கக் கூடியதாக அதிவுத் தடிதத்தில் தலைவர், சைவவித்தியா விருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

வே. குகதாஸ்,
பொதுமுகாமையாளர்.
இயக்குனர் சபைக்காக. (இ-3687)

கண்ணீர் அஞ்சலி

T. P. பத்மநாதன்

T, P. பத்மநாதன் 06-11-1992 அன்று காலமாகி விட்டார் என்பதையறிந்து அதிர்ச்சி அடைந்தோம். இவர் மகாஜனக் கல்லூரியில் பல ஆண்டு காலம் கடமையாற்றி எங்கள் பாடசாலை உதைபந்தாட்ட அணியை முன்னிலையில் நிலைக்கச் செய்து தொடர்ந்து எட்டு ஆண்டுகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் சாம்பியனாகத் திழைச் செய்த பெருமைக்குரியவர். மேலும் அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பெற்ற "சிங்கர் சீல்ட்" (Singer Shield) போட்டியில் வெற்றியீட்டி வழிவகுத்துக் கொடுத்தவர். உதைபந்தாட்டத்தோடு மட்டுமன்றி மற்றும் பல விளையாட்டுக்களிலும் இவர் தனது பங்களிப்பைச் செய்யத் தவறியதில்லை. இவரின் மறைவு எமது கல்லூரிக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். இவரின் மனைவி, பிள்ளைகள், உறவினர்களுக்கு எங்களின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரது ஆத்ம சாந்திக்கு எமது பிரார்த்தனைகள்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர்கள், பெற்றோர்கள்.

யா / மகாஜனாக் கல்லூரி,
தெல்லிப்பழை. (C/2517)

நன்றி நவில்கிறோம்

அகமது மம்மு

(பீடிமாஸ்டர் - சில்லாலை)

எமது குடும்பத்தலைவர் கடந்த 07-11-92 அன்று காலமானார் 08-11-92 இல் அவருடைய நல்லடக்கத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் விசேஷமாக பல வழிகளில் எமக்கு உதவிசெய்த அவருடைய உயிர் நண்பர்களாகிய பரமானந்தன் (ஆனந்தன்), நாதன் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்:
சிகபராஜா குடும்பத்தினர்
மனைவி, மகன்
(23216)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

புதிய முதிரை பலகை, நிலைகள், யன்னல்கள், யாலை நிலை, யன்னல்கள், தீராந்தி, பேபி கொட், குழந்தைகள் படுக்கை முதலியன விற்பனைக்குண்டு. ஆ. வல்லிபுரம், (முடமாவடி) இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (23211)

உடன் விற்பனைக்கு

கறுப்பு + பிறவுண் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொகையாக பெற்றுக் கொள்பவர்களுக்கு விசேட கழிவுண்டு. மல்லிகாபதி, சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (5557)

Prima+Bahira+Hy-Line+Christombu (பிறிமா + பகிரா + கைலைன் + கிறிஸ்தம்பு) ஆகிய இன பேட்டுக் குஞ்சுகள் மற்றும் புறொய்லர் குஞ்சுகளுக்கு தொடர்பு கொள்ளவும். மல்லிகாபதி, சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (5558)

நல்ல நிலையில் களனி ரயருடன் லம்பிரட்டா ஸ்கூட்டர், திருத்தி பாவிக்கக்கூடிய சைக்கிள், நாய்கூடு, குருவிக்கூடு, ஒரு வயது நிரம்பிய பொமனேரியன் பெண் நாய், ஒறிஜினல் பன்ரம் கோழிகள். தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: N. செல்வம், இல 22, ராதா லேன், வண்ணார் பண்ணை. (23202)

தேவை

ரியூட்டரிக்குத் தேவையான தளபாடங்கள் தேவை; தொடர்பு: இல 509, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்; [தட்டாதெரு சந்திக்கும், மில்க்வைற் தொழிலகத்திற்கும் இடையில்]. (23210)

மணப்பெண் தேவை

லண்டன் பிரஜா உரிமை உள்ள முப்பத்திரண்டு வயது உடைய அத்த நட்சத்திர, சாட்டட் எக்கவுண்டனுக்கு அழகான, படித்த மணப்பெண் தேவை. கனடா, லண்டன் ஆகிய இடங்களில் உள்ள பெண்களின் பெற்றோர் ஜாதகக் குறிப்புகளுடன் நேரில் தொடர்பு கொள்ளவும். சீதனம் எதிர்பார்க்கப்படும். இல. 81, றக்கா வீதி, யாழ்ப்பாணம். (23208)

ஆண்டு - 6 அனுமதி

பிரபல பாடசாலைகளுக்கான ஆண்டு - 6 அனுமதிக்கான மாதிரிப் பரீட்சைகள் 01-11-1992, 03-11-1992, 05-11-1992, 07-11-1992, 08-11-1992, 10 - 11 - 1992, 12-11-1992 ஆகிய தினங்களில் பி.ப. 3-30 மணிக்கு நடத்தப்படும்; Bond Institutes, 58A. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (கி-3752)

பிரபல பாடசாலைகளுக்கான ஆண்டு 6 மாதிரி அனுமதிப் பரீட்சை 10-11-92 செவ்வாய் பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெறும்; பரீட்சைக்கு தோற்ற முடியாதவர்கள் விளாத்தாள்களைப் பெற்றுக் கொள்ளலாம். புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (23195)

இடம்மாற்றம்

யாழ். நாவலர் வீதியில் இயங்கிய எமது கிளை வைத்தியசாலையான "ஆனந்த மருத்துவ நிலையம்" அன்பர்களது கோரிக்கைக்கு இணங்கத் தற்போது நல்லூர் கோவில் பின்வீதி 384, சிவா வைத்தியசாலைக்கு இடம் மாற்றப்பட்டுள்ளது. காலை 8-30 முதல் 12-30 வரை. பிற்பகல் 3-00 முதல் 6 வரை. டாக்டர் த. சிவானந்தன். (23184)

ENGLISH

ஆங்கிலத்தில் திறமைச் சித்தியெய்த, கட்டுரை, கடிதம் உரையாடல் அடங்கிய New Model English Compositions ஆண்டு 9, 10, O/L க்குரியது; ஆக்கியோன்: K. M. செல்வரத்தினம், B A. Hons (Lond) பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும். (5552)

துர்க்கா திருமண சேவை

31-08-1992 தொடக்கம் துர்க்கா திருமண சேவை சிவசக்தி ஸ்ரோர்ஸ், இல. 194, நாவலர் றோட், யாழ்ப்பாணம். சகலருக்கும் மேற்கூறிய முகவரிக்கு திங்கள், புதன், சனி தொடர்பு கொள்ளவும். (5547)

மணமகன் தேவை

வயது 33, நடசத்திரம் உத்தரம் 3ஆம் பாதம் உடைய மணப்பெண்ணுக்கு மணமகன் தேவை, சீதனம் கொடுக்கப்படும். அரச உத்தியோகத்தர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். இல 31, றக்கா வீதி, யாழ்ப்பாணம். (23207)

சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் விருத்தியாகுமா? விவாகம் நடைபெறுமா? உடல்நோய், மனக்கவலை என்பன தீருமா? கேட்டுப் பாருங்கள்! த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, நல்லூர் கோவில் பின் வீதி. (23185)

வெளிவந்துவிட்டது

ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் மீன்பார்வையுடன் கூடிய சைவநெறி, துரித மீட்டலுக்கான வினா-விடை ஆண்டு 11. ஆக்கம்: க. சந்திரசேகரம், வெளியீடு: சோதி வெளியீட்டு வாரியம்; எல்லாப்புத்தகசாலைகளிலும் கிடைக்கும்; (கி-3668)

தவறிவிட்டது

07-11-92 இரவு நவாலியில் இருந்து ஆனைக்கோட்டை ஊடாக புத்தூர் செல்லும் வழியில் 94ஸ்ரீ904 இலக்க மோட்டார் சைக்கிள் பதிவுப் புத்தகம், காப்புறுதி, ரைக்ஸ் வேறு பொருள்களும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும்; தணிகாசலம் அருளானந், சிவன்கோவிலடி, புத்தூர் மேற்கு, புத்தூர்; (23196)

O/L மாணவர்களுக்கு

கடந்த நான்கு வருட பரீட்சையின் எல்லாவித வினா-விடை மலிவு விலையில் விற்பனையாகின்றது. அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்திக்கு அருகாமை, யாழ்ப்பாணம்; (கி-3769)

ஓய்வூதியர் விவரங்கள்

ஜனவரியிலிருந்து அதிகரிக்கப்படவுள்ள ஓய்வூதியத்தை உறுதிப்படுத்த ஓய்வூதியர்கள் விவரங்களை கொடுக்கலாம்; சுற்று நிருபத்திற்கமையான படிவங்களை பிரதேச ஓய்வூதியர் சங்கப் பணிமனைகளில் ரூபா 3/- க்கு, தபால் மூலம் ரூபா 5/- முத்திரை அனுப்பியும் பெற்றுக்கொள்ளலாம்; P.S. திருச்செல்வம், இல.52, செம்மணி வீதி, நல்லூர். (23178)

மணமக்கள் தேவையா

உங்கள் மணப்பிரச்சினையை அலைச்சல் இன்றி இலேசாகத் தீர்க்கலாம். சந்திப்பு சனி காலை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்; (23158)

நல்லின பழமர நாற்றுக்கள்

தரமான நாரத்தையில் ஒட்டிய தோடை, தேசி; விளாத்தியில் ஒட்டிய தோடை, தேசி, கொடித்தேசி; மற்றும் விதைகளிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட தோடை, தேசி, பப்பாசி, அரிநெல்லி, அகத்தி, பாக்கு (கமுகு) நாற்றுக்களும்; கறுத்தக் கொழும்பான், விலாட், அம்பலவி, மல்கோவா ஒட்டு மாங்கன்றுகளும்; பதியமுறையில் பெறப்பட்ட கொடித்தேசி, கொய்யா, மஞ்சள்பழ கொடித்தோடை நாற்றுக்களும் விற்பனைக்கு உண்டு.

ஒரே தடவையில் 50 நாற்றுக்கள் கொள்முதல் செய்வோருக்கு 10% கழிவும், 100 நாற்றுக்கள் கொள்முதல் செய்வோருக்கு 15% கழிவும், 200 நாற்றுக்கள் கொள்முதல் செய்வோருக்கு 20% கழிவும் வழங்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும்.

வருடத்தில் எல்லா நாட்களிலும் சேவைசெய்ய ஆர்வமுடைய

சைவவித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(கி-3688)

ஓராண்டு நினைவஞ்சலி

இறைவன் பாதங்களில் சங்கமம்:
23 — 10 — 1991

திதி:
10 — 11 — 1992

திருமதி காமாட்ஷி பொன்னம்பலம்
(அனலைதீவு)

வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிறப்பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது;

எமது அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கும்,

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

17/19, பண்டாரக்குளம் ஒழுங்கை.
நல்லூர்.
யாழ்ப்பாணம்.

(23205)

அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்:
14 — 01 — 1927

மறைவு:
14 — 09 — 1992

அமரர் நல்லதம்பி இரத்தினம்

கடந்த 14-09-1992 திங்கள் கிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் நல்லதம்பி இரத்தினம் அவர்களுடைய அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியங்கள் இன்று (10-11-1992) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெற உள்ளன; அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்னாரது ஆத்ம சாந்திக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
திருமதி இ. இரத்தினம்,
திரு. திருமதி ஜெயரோகினி
செல்வரத்தினம்,
(மகள், மருகர்.)

இல. 38, 1ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(23203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் வீர நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

உதயன்

பாமரராக அனுமதிப்பதா?

தீவகத்தில் இருந்து இடம் பெயர்ந்த மாணவர்களில் 45 சத வீதமானோர் பாடசாலைக்குச் சமுகமளிக்காது படிப்பை இடைநிறுத்திவிட்டதாக ஆய்வு மதிப்பீடுகள் வெளிப்படுத்தி உள்ளனவாம். தமிழீழத்தின் எதிர்காலச் சந்ததியினர்-வருங்காலத் தலைவர்கள்-குறித்து அக்கறையும் கரிசனையும் உடைய எல்லோருக்கும் இத்தத் தகவல் அதிர்ச்சி தருவதாகும். இதயத்தைப் பதற வைப்பதாகும்!

போராட்டச் சூழ்நிலை இல்லாத சாதாரண காலத்திலும் தமிழீழத்தின் பல குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் கல்வி வசதி பெறமுடியாத அளவுக்கு அவர்களை ஏழ்மை வாட்டியது. வருமானம் குறைந்த தொழிலாளர்களின் பிள்ளைகள் படிப்பை இடைநிறுந்தி தமது குடும்பங்களின் பட்டினியைப் போக்கினர்.

ஈழத் தமிழர்கள் கல்வியையே கருந்தனம் என்றும், கேடில் செல்வம் என்றும் கருதி அதற்கு முக்கியத்துவமும், முதன்மைத்துவமும் அளித்து வருகிறார்கள் என்பது உண்மை.

ஆனால் அந்த வெளிப்பார்வைக்கும், பெருமைக்கும் சாவல் விடுவதுபோல குடாநாட்டிலேயே பலர் படிப்பறிவில்லாமல் இருக்கிறார்கள் என்பது கசப்பான உண்மையாகும். கிராமப் பகுதிகளில் வறுமை காரணமாக இளம் பிள்ளைகள் ஒரு தொழிலைத் தேடும் பொருட்டு கலவியை மறந்துபோனது உண்டு. கிராமப்புறங்களில் மட்டுமென்ன நகரின் சுற்றுப்புறச் சூழலிலேயே மாணவப் பராயத்தினருக்குப் போதிய கல்வி வசதி இல்லாமல் அவர்கள் பாமரர்களாக வாழ்வது பலகுக்குத் தெரியாமல் இருக்கலாம். அதுவே உண்மை.

எனவே படிக்கும் பராயத்தில் கல்வி அறிவு பெறமுடியாது இடையில் நிறுத்துவோர் பிரச்சினை ஏதோ புதியது என்பதல்ல. எனினும் இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்த மாணவரில் நாற்பத்தைந்து சத வீதத்தின்ர் கல்வியை இடைநிறுத்துவோர் வரிசையில் சேர்கிறார்கள் என்பது சமூகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

தமிழீழத்தின் வருங்காலப் பிரசைகளில் கணிசமான எண்ணிக்கையானோர் பாமரர்களாக மாறப்போகிறார்கள் என்பது பெரும் ஆபத்து நிறைந்ததாகும் நினைக்கவும் பயமாக இருக்கிறது. இதனைத் தடுப்பதற்குத் கருந்த நடவடிக்கை மேற்கொள்ளவில்லையெனில் அரசாங்கம் தமிழர்களை — எதிர்காலத் தமிழீழப் பிரசைகளைப் பலவீனமாக்கி வெற்றி காண இடம் கொடுக்கிறோம் என்று அர்த்தம்

பருவத்தே பயிர் செய்ய வேண்டும். கல்வி பயிலும் வயதை இழந்த பின்னர் படிப்பறிவு பெறுவது என்பது பொய்க்கதை; எனவே மாணவர்கள் படிப்பை இடையில் நிறுத்துவதை எங்கள் முன்னே உள்ள முக்கிய பிரச்சினையாக, பிரதான பிரச்சினையாகக் கருதி அணுக வேண்டும்.

2 கப்பல்களும் தொடர்ந்து சேவையில் ஈடுபடுத்தப்படும்

கொழும்பிலிருந்து அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம், நவ. 10

"யாழ். மாவட்டத்துக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை எடுத்து வர இரு கப்பல்கள் தொடர்ந்து பணியில் ஈடுபடும்."

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் யாழ். செயலகத்துக்கு மேற்கண்ட தகவலை அனுப்பியுள்ளார்.

யாழ். மாவட்டத்துக்கு தேவையான உணவு, மருந்துப் பொருள்களை எடுத்து வரவும்—

கொழும்பு செல்லும் நோயாளர்களின் போக்குவரத்துக்கும்— 'குமண' கப்பல் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் மேற்பார்வையில் தொடர்ந்து சேவையில் ஈடுபடும்.

'குமண' கப்பலுக்கு புறம்பாக அரச திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள், தொண்டர் நிறுவனங்கள் ஆகியவற்றுக்கான பொருள்களை எடுத்து வர 'குமாரி' கப்பலை தொடர்ந்து சேவையில் ஈடுபடுத்த புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதாக அரச அதிபர் அறிவித்துள்ளார்.

புனர்வாழ்வு அமைச்சில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி காரணமாக குமாரிக் கப்பல் சேவையை நிறுத்த புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு முன்னர் முடிவு செய்திருந்தது குறிப்பிடத்தக்கது (இ-3)

கொப்பேகடுவவுக்கு வவுனியாவில் சிலை

கொழும்பு, நவ. 10

அராலித்துறை கண்ணி வெடியில் கொல்லப்பட்ட லெப்டினன்ட் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் உருவச் சிலை ஒன்று இன்று செவ்வாய் காலை 8-45 மணியளவில் வவுனியாவஸ் நிலையத்துக்கு அருகில் திருமதி கொப்பேகடுவவினால் திறந்து வைக்கப்படும் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது; (இ-எ)

மின்னல் தாக்கி நால்வர் மரணம்

கொழும்பு, நவ. 10

புத்தளம் குடியேற்றப்பகுதியில் மின்னல் தாக்கியதால் ஒரு மாணவன் உட்பட நான்கு பேர் மரணமானார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

காட்டுப்பகுதி ஒன்றில் தேக்கு மரக்கன்றுகளை அவர்கள் நட்டுக்கொண்டிருந்த சமயமே அவர்களை மின்னல் தாக்கியதாக பொலீஸார் தெரிவித்தனர். (இ-எ)

நீரில் மூழ்கி மரணம்

நண்பர்களுடன் கேணியில் குளித்து விளையாடிய 13 வயதுச் சிறுவன் நீரில் மூழ்கி மரணமானான் இச்சம்பவம் நேற்று பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்றது.

இராணுவ நடவடிக்கை காரணமாக காரைநகர் தோப்புக்காடுப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வந்து வட்டுக்கோட்டையில் வசிக்கும் விக்னேஸ்வரன் தம்பதிகளின் மூத்த மகன் குமார் என்ற சிறுவனே மரணமானவர் ஆவார்.

வங்கிக் கொள்ளையரில் ஒருவர் முன்னாள் சிப்பாய்

கொழும்பு, நவ. 10

பலாங்கொடையில் உள்ள இலங்கை வங்கிக்கிளையில் இருந்து ஐம்பது லட்சம் ரூபா பணம் கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட இரு நபர்களில் ஒருவர் முன்னாள் கடற்படைச் சிப்பாய் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கைதானவர்கள் இருவரும் மகரகம, பன்னிப்பிட்டியாவைச் சேர்ந்தவர்கள்.

கொள்ளை இடம் பெற்ற சில மணித்தியாலங்களுக்குள் கொள்ளையிடப்பட்ட பணத்தில் 30லட்சம் ரூபாவும் வெளிநாட்டுக் கரன்ஸிகளும் மீட்கப்பட்டன. (இ-எ)

மாவீரர் தினத்தையொட்டி துரிதமான ஏற்பாடுகள்

யாழ்ப்பாணத்தில் மாவீரர் தினத்தை மிகவும் சிறப்பாக கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை பொது அமைப்புக்கள், சனசமூக நிலையங்கள் ஆகியவை துரிதமாக மேற்கொண்டு வருகின்றன.

பிரதான வீதிகளில் வீதி வளைவுகள், பந்தல்கள் என்பன அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

பாஷையூர், ஈச்சமோட்டை, பாண்டியன்தாழ்வு சந்திகளில் மாவீரர்களின் திருவுருவப் படங்கள் வைப்பதற்கான மேடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

மாவீரர் தினம் எதிர்வரும் 21 ஆம் திகதியில் இருந்து 27 ஆம் திகதி வரை தமிழீழம் எங்கும் நினைவு கூரப்படவுள்ளது.

இதனை விட மாவீரர் எழுச்சி வாரத்தின் போது வீதிகள், பொது இடங்கள் என்பன சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்படுவதோடு பொது இடங்களில் மரங்களும் நடுவதற்கான ஏற்பாடுகளில் பொது அமைப்புகள் ஈடுபட்டு வருகின்றன. (இ-17)

பாக். பிரசை கைது

கொழும்பு, நவ. 10

மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் வாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி 36 இலங்கை இளைஞர்களிடமிருந்து பெருமளவு பணத்தைத் திரட்டி மோசடி செய்ததாகக் கூறப்படும் பாகிஸ்தானியப் பிரசை ஒருவரை குற்றத்தடுப்புப் பொலீஸார் கைது செய்தனர். (இ-எ)

இளைய தலைமுறையினரை சிறந்த நிர்வாகிகளாக உருவாக்க வேண்டும்

கருத்தரங்கில் மாநகர ஆணையாளர்

உள்ளூராட்சிச் சேவையில் தனிநபர் செல்வாக்கு ஆதிக்கம் செலுத்திய காலம் இப்போது இல்லை; முகாமைத்துவக்கலை விஞ்ஞான மயப்படுத்தப்பட்டு வருகிறது. அதனால் ஆர்வமும், திறமையும் உள்ள எவரும் இப்போது நிர்வாகிகள் ஆகலாம். இதனை ஏற்றுக்கொள்ளும் மனோநிலை எம்மத்தியில் வளர வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாநகர ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம்.

யாழ். மாநகரசபை உத்தியோகத்தர்களுக்கான இரண்டு நாள் பயிற்சிக் கருத்தரங்கு சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் நாவலர் மண்டபத்தில் நடைபெற்றது; பிரஸ்தாப கருத்தரங்கை சனிக்கிழமை ஆரம்பித்து வைத்துப் பேசுகையிலேயே மாநகர ஆணையாளர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

முதல் நாள் கருத்தரங்கில் கணனி அறிமுகம், ஊக்குவித்தல் ஆகிய விடயங்கள் குறித்து பயிற்சியாளர்களுக்கு விளக்கப்பட்டது.

மாநகர ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் தமது ஆரம்ப உரையில் மேலும் தெரிவித்ததாவது;

புதியனவற்றை ஏற்றுக்கொள்ளும் மனோநிலையும் இளந்தலைமுறையினர் நிர்வாகிகளாவதைச் சகித்து, கொண்டு ஊக்குவிக்கும் குணாம்சமும் இப்போது உயர் பதவிகளை வகிப்போருக்கு இருக்க வேண்டும். அப்போது தான் ஒரு நிறுவனம் தனது இலக்கை நோக்கி விரைவாகச் சென்றடைய முடியும். இது போன்ற கருத்தரங்குகள் அவற்றுக்குப் பெரிதும் உதவும்.

கருத்தரங்குகள் மூலம் திறமையுள்ள புதிய நிர்வாகிகளை உருவாக்க முடியும். எமது நிறுவனத்தின் மனித வளத்தைத் தக்கபடி பயன்படுத்தி உற்பத்தித் திறனை உயர்த்தலாம் — என்றார். (அ-126)

பனம் விதைகள் நடுகை

யாழ். கல்லுண்டாய் வெளியில் 2,000 பனம் விதைகள் நடப்பட்டுள்ளன.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழக பனை தென்னை வள அபிவிருத்தி ஒன்றியப் பகுதியினர், மானிப்பாய் தெற்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தினூடாக கடந்த 29 ஆம் திகதி இப்பணியில் ஈடுபட்டனர்.

மேற்படி நிகழ்ச்சியில் பனை தென்னை வள அபிவிருத்தி ஒன்றியப் பகுதியினர், மானிப்பாய் தெற்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள், ஆனைக்கோட்டை கிராமிய உற்பத்திக்குழுவினர், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் வலிகாமம் பிரிவு ஊழியர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ)

பஸ் விபத்தில் 8 பேர் பலி!

நுவரெலியா மாவட்டம் ரம்பொடை என்னுமிடத்தில் நேற்று இடம்பெற்ற பஸ் விபத்து ஒன்றில் எட்டுப் பயணிகள் உயிரிழந்தனர் என்றும் —

முப்பது பயணிகள் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ராஜீவ்காந்தி...

(2 ஆம் பக்கத்தொடர்ச்சி)

திரு. ஜெயில்சிங்கின் இந்தக் கருத்துக்களினால் ஆத்திரமடைந்த இந்திரா காங்கிரஸின் தற்போதைய எம். பிக்கள் சிலரும் முன்னாள் எம். பிக்கள் சிலரும் நேற்று புதுடில்லியில் திரு. ஜெயில்சிங்கின் கொடும்பாவியை எரித்ததுடன்—

ஜெயில்சிங் தாம் தெரிவித்த கருத்துக்களை வாபஸ் வாங்குவதுடன் மன்னிப்பு கோர வேண்டும் என்று வற்புறுத்தினர்.

ஜெயில்சிங் மன்னிப்புக் கோரத் தவறும் பட்சத்தில் அவரை மன்னிப்புக்கோர நிர்ப்பந்திக்கும் வகையில் நாடு தழுவிய இயக்கம் நடத்தப்படும் என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

மூடப்பட்ட...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யைப் பூர்த்தி செய்வதற்கு முன்பதாக வேலையில் இருந்து நிறுத்தப்பட்ட ஊழியர்களின் விவரம் பற்றித் தாமதம் இன்றி தாபனப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கும்படி இந்த சுற்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய ஊழியர்களைப் பதிவு செய்து குழாம் (Pool) ஒன்றில் வைக்கவும் தேவை ஏற்படும்போது அதில் உள்ளவர்களை மீண்டும் சேவையில் அமர்த்துவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அவர்களுக்கு மாற்று வேலைவாய்ப்பு வழங்கப்படும் வரை அல்லது அவர்கள் பத்து வருட கால சேவையைப் பூர்த்தி செய்யும் வரை அவர்களுக்கான சம்பளத்தை வழங்கத் திறைசேரியில் இருந்து நிதி பெற்றுக்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்படுகின்றது. இக்குழாமில் உள்ளவர்கள் பத்து வருடத்தைப் பூர்த்தி செய்த பின்னர் ஓய்வில் அனுப்பப்படுவார்கள். அன்று முதல் அவர்கள் ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு உரித்துடையவர்கள் ஆவார்கள். (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னாரில் முன்னேறிய படையினர் பின்வாங்கினர்

யாழ்ப்பாணம், நவ. 10

மன்னார் மாவட்டத்தில் ஸ்ரீலங்கா படையினர் மேற்கொண்ட "அதிவேக அடி" இராணுவ நடவடிக்கையின் போது தாம் முன்னேறிய வட்டக்கண்டல், கட்டுக்கரைக் குளம் பகுதிகளில் இருந்து படையினர் தற்போது பின்வாங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தப்பகுதிகளில் இருந்து மக்களின் விவசாய உபகரணங்களை படையினர் எடுத்துச் சென்றிருப்பதாகவும் — இதனால் அந்தப்பகுதிகளில் மீளக்குடியமர்த்த மக்கள் தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது கஷ்டப்படுவதாகவும் — அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

[உ-3]

இன்று

தென்மராட்சி, நவ. 10

பனை அபிவிருத்திச் சபை பனைப்பகுதியில் யுவதிகளுக்கு பனம் பொருள் உற்பத்தி பயிற்சி வகுப்புகளை நடாத்தவுள்ளது.

முதற்கட்டமாக முகமாலை, இந்திராபுரம், வேம்பொடு கேணி இத்தாவில் பகுதிகளிலுள்ள யுவதிகளுக்கான பயிற்சி வகுப்புகள் இன்று இந்திராபுரம் மக்கள் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

[உ-117]

மரண அறிவித்தல்கள்

சின்னத்துரை கனகரத்தினம்

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட வரும், கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகக் கொண்ட வருமான சின்னத்துரை கனகரத்தினம் அவர்கள் 09-11-92 இல் காலமானார்.

அன்னார் அருந்ததிநாயகத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம், இராசரத்தினம் மற்றும் தம்பிராசா, நாகம்மா, அன்னபூரணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற தையல்நாயகி, சிவநாயகி, சண்முகதாசன ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [10-11-92] பிற்பகல் 1 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
புவனேந்திரன்
[பெறாமகன்]

ஆராய்ச்சியார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

[23217]

திருமதி பொன்னையா செல்லம்மா

[மட்டுவில் தெற்கு சாவகச்சேரி]

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த திருமதி பொன்னையா செல்லம்மா காலமானார்.

இவர் காலஞ்சென்ற தம்பையா சின்னப்பிள்ளையின் அருமை மகளும், காலஞ்சென்ற பொன்னையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்வி பொ. மகேஸ்வரி, திரு. பொ. படைவீரசிங்கம் (இளைப்பாறிய, மின்சார உத்தியோகத்தர்), திருமதி பா. இராசேஸ்வரி பாலசுந்தரம் (ஆசிரியை, யாழ் மட்டுவில் சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம்), திருமதி லோ. பரமேஸ்வரி [கனடா], திருமதி நாகேஸ்வரி [கனடா], திரு. பொ. பாலசிங்கம் [கனடா], திருமதி உ. ஜெகதீஸ்வரி [கனடா] ஆகியோரின் அருமைத் தாயாரும், திரு. லோகேஸ்வரன் [கணக்காளர் - ரொறன்ரோ வங்கி], திரு. வே. பாலசுந்தரம் (ஆசிரியர், யாழ். உருத்திரபுரம் மகா வித்தியாலயம்), திரு. க. ஆனந்தமணி [கனடா], திருமதி பார்வதி [ஆசிரியை, யாழ். பார்வதி வித்தியாசாலை, மந்துவில்], திரு. உருத்திரன் [கனடா], திருமதி சறோஜா [கனடா] ஆகியோரின் அருமை மாமியாரும், கனடாவில் வசிக்கும் றூபன், சாந்தி, கவிதா, சூட்டி, துர்க்கா, அர்ஜுனா, கஜானான், அஷ்சுவினி, சடேஷ் ஆகியோ பேர்த்தியும் இளைப்பாறிய தபால் உத்தியோகத்தர் வல்லிபுரம், இளைப்பாறிய ரயில்வே உத்தியோகத்தர் கோவிந்தபிள்ளை, இளைப்பாறிய ஆசிரியை அண்ணாமலை பொன்னம்மா (கனடா), திருமதி தங்கம்மா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (10-11-1992) செவ்வாய் பிற்பகல் 3-00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
பொ. படைவீரசிங்கம், [மகன்]

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி

[23213]

மேலும் மரண அறிவித்தல்கள் 2ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 10-11-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

அயோத்தி பிரச்சினை மீண்டும் சூடு பிடிக்கிறது

ராவ் அரசைக் கவிழ்க்க பாரதீய ஜனதா அழைப்பு!

இந்தியாவில் பிரதமர் நரசிம்மராவ் தலைமையிலான அரசைக் கவிழ்த்து புதிய பொதுத் தேர்தல் நடத்தப் படவேண்டும் என்று பாரதீய ஜனதாக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

இதனைத் தொடர்ந்து பாரதீய ஜனதாக் கட்சி தனது தேர்தல் பிரசாரத்தைத் தொடக்கிவிட்டிருப்பதாக "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் டிசம்பர் 6 ஆம் நாள் அயோத்தியில் ராமர் கோயில் கட்ட திட்டமிட்டுள்ள இந்துக்களின் முயற்சியை மத்திய அரசு குலைத்தால் பேரழிவு கொண்டபதில் விளைவுகள் ஏற்படும் என்று பாரதீய ஜனதா தலைவர் எல். கே. அத்வானி புவனேஸ்வரில் நடந்த பொதுக் கூட்டத்தில் எச்சரிக்கை விடுத்தார்.

அயோத்தி ராமர் கோயில் பிரச்சினைக்கு இணக்கமான தீர்வுகாண நரசிம்மராவ் அரசுக்கு விஸ்வ ஹிந்து பரிஷித் வழங்கிய மூன்று மாத காலக் கெடு முடிவுற்றதை அடுத்து மீண்டும் அப்பிரச்சினை சூடு பிடிக்கத் தொடங்கியிருப்பதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

[உ-எ]

இலங்கைக்கு ஆயுதங்களை விற்க பிரிட்டன் கட்டுப்பாடு விதிப்பு

லண்டன், நவ. 10

இலங்கைக்கான ஆயுத விற்பனைத் தடையை பிரிட்டன் முற்றாக நீக்கவில்லை என்று தற்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சில கட்டுப்பாடுகளுடனேயே ஆயுத விற்பனை மீதான தடையை பிரிட்டன் நீக்கியிருப்பதாக பிரிட்டிஷ் வெளியுறவுத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

இந்தக் கட்டுப்பாடுகளின் கீழ் —

★ நேரடியாக யுத்தத்தில் பாவிக்கப்படும் ஆயுதங்கள், பெரும் அழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்கள் போன்றவற்றை பிரிட்டன் இலங்கைக்கு விற்பனை செய்யாது.

★ வெடிகுண்டுகள், பீரங்கிக் குண்டுகள், வெடி மருந்துகள் போன்றவற்றைத் தவிர்த்து கவச வாகனங்கள், விமானங்கள், உதிரிப்பாகங்கள் போன்றவற்றையே பிரிட்டன் விற்கும்.

★ இலங்கையில் மனித உரிமைகள் விவகாரத்தைப் பிரிட்டன் உன்னிப்பாகக் கவனிக்கும். இலங்கைக்கு ஆயுதங்களைத் தொடர்ந்து விற்பனை செய்வது இலங்கை மனித உரிமைகளைப் பேணுவதைப் பொறுத்திருக்கும். — என்று தெரிவிக்கப்பட்டது.

இலங்கைக்கு பிரிட்டன் ஆயுதங்களை விற்க இணங்கியிருப்பதால், ஏனைய ஐரோப்பிய நாடுகளும் தமது தடைகளை நீக்கி இலங்கைக்கு ஆயுதங்களை விற்க இணங்கக்கூடும் என்று செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டது.

[உ-3-6]

வடமராட்சியில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தீஸ் [3 வயது], உடுப்பிட்டி ஆதியாமலையைச் சேர்ந்த ஆர். ஆஷா [8 வயது], உடுத்துறை வடக்கைச் சேர்ந்த வி. செந்தூரன் [10 வயது] ஆகியோரே இளம்பிள்ளைவாத நோயினால் பீடிக்கப்பட்ட ஏனைய மூவருமாவர்.

இளம்பிள்ளைவாத நோய் தடுப்பு நடவடிக்கைகளில் இப்பகுதி சுகாதரப் பகுதியினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளையில் உடுவில் பகுதியிலும் இளம்பிள்ளைவாத நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. உடுவில் தெற்கு மட்டக்கக்கி என்ற கிராமத்தில் எட்டு வயதுச் சிறுமி ஒருத்திக்கு இளம்பிள்ளைவாத நோய் பிடித்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டு அவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார்.

[அ-144-68]

வடக்கு-கிழக்கைப்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பனம் தயாராக இருப்பதாக அந்த அமைப்பின் பிரதிநிதி ஒருவர் கொழும்பு தினசரிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார் என்றும் இந்திய வானொலி அறிவித்தது.

விமானப்படை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டது.

விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் படையினர் தாக்குதல் நடவடிக்கை மேற்கொள்ளும் பகுதிகளுக்கு வேவு மற்றும் கண்காணிப்பு வேலைகளை மேற்கொள்ளச் சென்றபோதே இந்த ஹெலிக்கொப்டர் சுட்டு வீழ்த்தப்பட்டது என்றும் கூறப்பட்டது.

[உ-3 6]

'குமண'...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பருத்தித்துறையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று புறப்பட்டுச் சென்ற 'குமண' கப்பலில் 270 தபால் பொதிகள், லண்டன் விம்பிள்டன் கணபதி ஆலயத்துக்காக யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பட்ட புதிய மணவறை போன்றவையும் எடுத்துச் செல்லப்பட்டன.

[உ-3-144]

ஆரம்ப ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள்

ஆரம்ப ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் நாளை மறுதினம் காலை 9 மணிக்கு யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெறும் என யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் ஆரம்ப ஆசிரியர் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு 38 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் கடந்த முதலாம் திகதி வவுனியா கல்வித் திணைக்களத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் போக்குவரத்து வசதியீனங்கள் காரணமாக 33 பேர் அப்பரீட்சைக்குத் தோற்ற முடியாத நிலை ஏற்பட்டது என்றும் —

அவர்களுக்காக யாழ். கல்வித் திணைக்களத்தில் விசேட நேர்முகப் பரீட்சைகள் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாக கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

[உ]

இந்த தசாப்த இறுதியில்

ஆசியாவில் 20 லட்சம் பேர் எய்ட்ஸுக்குப் பலியாவர்

கொழும்பு, நவ. 10

இந்த தசாப்தத்தின் இறுதியில் ஆசியாவில் 20 லட்சம் பேர் எய்ட்ஸ் நோய்க்குப் பலியாவார்கள்.

இப்படி உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் சர்வதேச எய்ட்ஸ் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் மைக்கல் புறுகன் இத் தகவலை வெளியிட்டார்.

கண்ணீர் அஞ்சலி

சின்னத்துரை கனகரத்தினம்

நல்லூர் பல நோ. கூ. சங்க கிளை இல 23ற்கு நிரந்தர கட்டடம் அமைப்பதற்கு காணியை நன்கொடையாக வழங்கியவரும், கிளை நிர்வாக உறுப்பினருமான சி கனகரத்தினம் அவர்களது மறைவிற்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நல்லூர் பல நோ. கூ. சங்க கிளை, இல, 23
நிர்வாகக் குழு

சம்பியன் லேன்,
கொக்குவில்.

[23218]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org